FWC

# வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் தொண்டைமானாறுவெளிக்களநிலையம் நடாத்தும்

# Field Work Centre

## தவணைப் பரீட்சை, மார்ச் - 2018
## Term Examination, March - 2018

| juk;:- 12(2019) | மனைப்பொருளியல் | Neuk;:- %dW kzpj;jpahyk; |
|---|---|---|

### பகுதி I

❖ **சரியான விடையைத் தெரிவு செய்க.**

01. பௌதீக வாழ்க்கைச் சூழலை அடிப்படையாகக் கொண்டது.
   1) கிராமிய மற்றும் நகரச்சூழலின் நிருமாணிப்பு.
   2) சமூக வாழ்க்கைச் சூழல் நிருமாணிப்பு.
   3) சிறந்த வாழ்க்கைச் சூழலின் நிருமாணிப்பு.
   4) பூகோள நிறைபேறான வாழ்க்கைச் சூழல் நிருமாணிப்பு.
   5) சமூக பௌதீக வாழ்க்கைச் சூழல் நிருமாணிப்பு.

02. வடிவமைப்பின் அடிப்படை அம்சங்கள்.
   1) நிறம், சந்தம், வடிவம், ரேகை. 2) நிறம், சமனிலை, சந்தம், கோடுகள்
   3) கோடுகள், வடிவம், நிறம், இழையமைப்பு. 4) இழையமைப்பு, பொருத்தப்பாடு, விகிதசமம்.
   5) நிறம், இழையமைப்பு, வடிவம், சந்தம்.

03. வளை நெளிக்கோடுகள் மூலம் வெளிப்படுத்தப்படும் உணர்வுகள்.
   1) உயரம், உறுதி, உயர்வு, நேர்மை
   2) அடக்கம், சாந்தம், உயர்வு, உறுதி
   3) அழகு, மகிழ்ச்சி, சாந்தம், உறுதி.
   4) செயலூக்கம், சந்தம், லலிதம், பரபரப்பு.
   5) அமைதியின்மை, செயலூக்கம், பரபரப்பு, உறுதி.

agaram.lk

04. கட்டட நிருமாணிப்பின் போது அதனுள் இடம் பெறும் என எதிர்பார்க்கப்படும் கருமங்களை வினைத்திறனுள்ளவாறு அமைத்துக் கொள்வது.
   1) பொருத்தப்பாடு எனப்படும் 2) செயற்படு தன்மை எனப்படும்.
   3) தரநிரயமம் எனப்படும் 4) நவீனத்துவ மரபு எனப்படும்.
   5) பசுமை எண்ணக்கரு எனப்படும்.

05. நிலத்தோற்ற வடிவமைப்புக்கு தாவரங்களைத் தெரிவு செய்யும் போது கவனிக்க வேண்டியவை.
   1) நிலத்தின் தோற்றம், பருமன், சாய்வு
   2) நிலத்தின் அளவு, வடிவம், சாய்வு
   3) காணியின் நீளம், அகலம், மண்ணின் தன்மை.
   4) நிலத்தின் அளவு, படிக்கட்டுக்கள், நிலத்தோற்றம்.
   5) நிலத்தின் அளவு, நீர்தாவி, சாய்வு, வடிவம்.

06. சூழலுக்கு பாதகமானதும் இழிவளவாக்க வேண்டியதுமானது,
   1) நிலக்கரி 2) நீர்மின்சக்தி 3) உயிர் வாயு
   4) ஞாயிற்றுக் கலம் 5) மழைநீர்

07. காபோவைதரேற்று மூலக்கூறொன்றின் $H : O$ விகிதம்.
   1) 2 : 1 2) 2 : 2 3) 1 : 2 4) 1 : 3 5) 3 : 1

08. மொனாசக்கரைட்டின் மூலக்கூற்றுச் சூத்திரம் முறையே.
   1) $C_7H_{22}O_7$ 2) $C_6H_{10}O_6$ 3) $C_6H_{22}O_{11}$ 4) $C_6H_{12}O_6$ 5) $C_6H_{12}O_5)n$

09. கருப்பஞ்சாறு, பீற்றூட், பழங்கள் ஆகியவற்றில் காணப்படும் வெல்ல வகை.
1) குளுக்கோசு, பிரற்றோஸ்  2) சுக்குரோசு, பிரற்றோஸ்  3) சுக்குரோசு, குளுக்கோசு
4) சுக்குரோசு, மோல்ரோசு  5) இலற்ரோசு, பிரற்ரோசு

10. மிக எளிமையான அமினோ அமிலம் எது?
1) லியூசின்  2) திரியோனின்  3) இலைசீன்  4) கிளைசின்  5) மெத்தியோனின்

11. சோயா அவரையில் காணப்படும் பல் நிரம்பாக் கொழுப்பமிலம்.
1) ஒலேயிக் கமிலம்  2) பாமிற்றிக்கமிலம்  3) தியறிக்கமிலம்
4) லினோலெயிக்கமிலம்  5) பியூத்திரிக்கமிலம்

12. $$R - \overset{\displaystyle H}{\overset{|}{\underset{\underset{\displaystyle NH_2}{|}}{C}}} - COOH$$ இது புரதத்தின் கட்டமைப்புச் சூத்திரமாகும். இங்கு $R$ எனக் குறிப்பிடப்படுவது,
1) காபொட்சில் கூட்டம்  2) அமைனோக் கூட்டம்  3) அல்கைல் கூட்டம்
4) பீனைல் கூட்டம்  5) $RH$ கூட்டம்

13. விற்றமின் $B_{12}$ காணப்படும் உணவு மூலங்கள்.
1) கீரைவகை, தானியங்கள், பாண், பஸ்ரா
2) இறைச்சி, காய்கறி, வாழைப்பழம், தேன்
3) மஞ்சள் நிறக் காய்கறிகள், பழங்கள், தானியங்கள்.
4) பால் சார்ந்த உணவுகள், வாழைப்பழம், காளான்.
5) இறைச்சி, கோழி இறைச்சி, மீன், முட்டை, பால்.

14. மிகையாக உள்ளெடுக்கும் போது சிறுநீருடன் கழிக்கப்படும் இரண்டு விற்றமின்கள்.
1) விற்றமின் $C$ யும், விற்றமின் $E$ யும்.  2) விற்றமின் $B_{12}$ யும், விற்றமின் $D$ யும்.
3) விற்றமின் $B_3$ யும், விற்றமின் $K$ யும்.  4) விற்றமின் $A$ யும், விற்றமின் $B_6$ உம்.
5) விற்றமின் $B_1$ உம், விற்றமின் $B_2$ உம்.

agaram.lk


15. உணவின் கூறு என்ற வகையில் உடல் நிறையில் நீரின் அளவு.
1) 50 – 70 வீதம்  2) 60 – 80 வீதம்  3) 65 – 75 வீதம்
4) 60 – 75 வீதம்  5) 50 – 60 வீதமாகும்.

16. உடலின் மின் பகுப்புச் சமனிலையைப் பேண உதவும் கூறு.
1) நீர்  2) இரும்பு  3) புரதம்  4) விற்றமின்  5) கனியுப்புக்கள்

17. பின்வருவனவற்றுள் சிபார்சு செய்யப்பட்ட நாளாந்த போசணைத் தேவை அட்டவணை (2007) இன் படி சரியான கூற்று எது?
1) வாழ்க்கைச் சக்கரத்தின் வெவ்வேறு பருவங்களின் போது கல்சியத்தின் தேவை மாறுபடாது.
2) பெண்களின் இரும்புத் தேவைப்பாடு ஆண்களின் இரும்புத் தேவைப்பாட்டை விட அதிகமாகும்.
3) புரதத் தேவைப்பாடு முதுமைப் பருவத்தில் குறைவடையும்.
4) விற்றமின் $A, C$ என்பனவற்றின் தேவைப்பாடுகள் மில்லிக்கிராம்களில் குறிப்பிடப்படும்.
5) கர்ப்ப காலத்தில் சக்தித் தேவைப்பாடுகள் மாறுபடாது.

18. மேசை விரிப்பொன்றை மேசையிலிடும் போது மேசை விளிம்பிலிருந்து கீழே விழ விடும் அளவு.
1) 40 cm  2) 30 cm  3) 50 cm  4) 35 cm  5) 48 cm

19. உணவுக் கூம்பகத்திலடங்கும் வெவ்வேறு உணவுக் கூட்டங்கள் $A, B, C, D, E$ எனக் காட்டப்பட்டுள்ளன.




இவ்வரிப்படத்தைப் பயன்படுத்தி 18 – 19 வரையான வினாக்களுக்கு விடை எழுதுக?

$B$ யில் உள்ள உணவுப் பொருட்களில் பிரதானமாகக் காணப்படும் இரண்டு போசணைப் பொருட்கள்.

1) விற்றமின்களும், புரதங்களுமாகும்.
2) புரதங்களும், கொழுப்புக்களுமாகும்.
3) கொழுப்புக்களும், கனியுப்புக்களுமாகும்.
4) காபோவைதரேற்றும், கொழுப்புக்களுமாகும்.
5) விற்றமின்களும், கனியுப்புக்களுமாகும்.

20. தொற்றா நோயாகிய நீரழிவு, இதயநோய் போன்றவற்றிக்கு உணவு வேளையைத் திட்டமிடும் போது கட்டுப்படுத்தப்பட வேண்டிய உணவுக் கூட்டங்கள்.

1) $ABE$ ஆகியன.
2) $ACD$ ஆகியன.
3) $BCE$ ஆகியன.
4) $CEA$ ஆகியன
5) $CE$ ஆகியன.

21. குறும்பாவாடையின் அடிப்படை உருவை நிருமாணிப்பதற்கு முன்பக்க இடுப்பு அளவு கணிக்கப்படும் முறை.

1) $\left(\frac{\text{இடுப்புச் சுற்றளவு}}{2}+1.5\text{ cm}\right)$
2) $\left(\frac{\text{இடுப்புச் சுற்றளவு}}{4}+1.5\text{ cm}\right)$
3) $\left(\frac{\text{இடுப்புச் சுற்றளவு}}{2}+2\text{ cm}\right)$
4) $\left(\frac{\text{இடுப்புச் சுற்றளவு}}{2}+1.25\text{ cm}\right)$
5) $\left(\frac{\text{இடுப்புச் சுற்றளவு}}{4}+1.5\text{ cm}\right)$

agaram.lk

22. பின்வருவன எரித்தல் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட இயல்புகளாகும். அவற்றுள் பருத்தி நாரை இனங்காணத்தக்க இயல்பு.

1) மயிர் எரியும் மணத்தையும், பிரகாசமான சிறுமணியையும் உருவாக்கல்.
2) மஞ்சள் சுவாலையும் கடினமான மணியும் எஞ்சியிருக்கும்.
3) கடதாசி எரியும் மணத்தையும், சாம்பல் நிறமுள்ள மென்மையான சாம்பலும் எஞ்சியிருக்கும்.
4) மஞ்சள் சுவாலையும், பிரகாசமான சிறுமணியும் உருவாதல்.
5) மயிர் எரியும் மணமும், மென்மையான சாம்பலும் எஞ்சியிருத்தல்.

23. செலுலோசு நார்கள் பெறப்படுவது,

1) கம்பளி
2) பட்டு
3) தெரிலீன்
4) பொலியெஸ்டர்
5) பருத்தி

24. ஓவர்லொக் தையல் பயன்படுவது,

1) விளிம்பு மடித்து தைப்பதற்கு
2) விளிம்பு நேர்த்தியாக்கல்.
3) விளிம்பை அலங்கரித்தல்
4) விளிம்பு மூடித்தைத்தல்
5) விளிம்பு பொருத்துவதற்கு

25. நைலோன், கம்பளி ஆகிய நார்களுக்கு இருக்கும் பொதுவான இயல்பு.

1) ஒளிபுகக் கூடியதும், உருளையுருவமானதுமான அமைப்பைக் கொண்டிருத்தல்.
2) வெப்பத்திற்கு உணர்ச்சியுடையதாய் இருத்தல்
3) நீரை விரைவாக அகத்துறிஞ்சக் கூடியதாய் இருத்தல்.
4) பூச்சிகளினால் தீங்கு விளைவிக்கப்படல்.
5) அடிக்கடி சலவை செய்வதற்கு தாக்கு பிடிக்காமை.

## பகுதி II

❖ **முதலாம் வினாவிற்கும் ஏனைய நான்கு வினாக்களுமாக 5 வினாக்களுக்கு விடைதருக.**

01.

ஒரு கிராமப்புற வீடொன்றில் எளிமையான முறையில் திவாகரன் குடும்பம் சிறப்பாக வாழ்க்கை நடத்துகின்றனர். உள்ளக, வெளியக அலங்கரிப்பிலும், உடை அமைத்தல், வீட்டுத் தோட்டம் செய்தல், சுற்றாடலை அழகுபடுத்துதல் போன்ற விடயங்களில் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்தனர். சுய தொழில், பொழுதுபோக்கு வீட்டிலுள்ள வளங்களை தகுந்த முறையில் முகாமிப்பதிலும் திருப்தி அடைந்தனர்.

1) கலைத்துவம் மற்றும் வடிவமைப்புக் கோட்பாட்டிற்கேற்ப அவர்களின் வீட்டை அலங்கரிக்கும் நான்கு முறைகளை எழுதுக?
2) இவ்வீட்டில் இயற்கை ஒளியைப் பெற்றுக் கொள்வதற்காக அவர்கள் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் நான்கு தருக?
3) வீட்டு வளங்களை முகாமிப்பது தொடர்பாக இக்குடும்பம் கருத்தில் கொள்ள வேண்டிய 4 படிமுறைகள் எவை?
4) பசுமை எண்ணக்கருவை அடிப்படையாகக் கொண்டு சூழல் நேயவிடயங்களை பயன்படுத்துவதில் இக்குடும்பம் எடுக்கக் கூடிய நடவடிக்கைகள் நான்கு தருக?
5) இக்குடும்பம் வீட்டுத்தோட்டம் தொடர்பாக நிலத்தோற்ற வடிவமைப்பில் அதற்கான தாவரங்களைத் தெரிவு செய்யும் போது செலுத்த வேண்டிய விடயங்கள் நான்கினை எழுதுக?

(5X5=25புள்ளிகள்)

02.

1) கட்டடம் ஒன்றின் புறச்சூழல் என்பதனால் கருதப்படுவது யாது?
2) புறவெளி வடிவமைப்பு என்றால் என்ன?
3) புறவெளியை வடிவமைக்கும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள் மூன்றைக் குறிப்பிடுக.
4) மென் நிலத்தோற்ற வடிவமைப்பு என்றால் என்ன?

agaram.lk

(4x3=12 புள்ளிகள்)

03.

1) துணி உற்பத்திக்காகப் பயன்படும் நார் வகைகளை வகைப்படுத்திக் காட்டுக?
2) நூல் உற்பத்தியின் அடிப்படைப் படிமுறைகள் எவை?
3) பருத்தி நாரின் உற்பத்திப் படிமுறையை விளக்குக?
4) கம்பளி ஆடையில் வெப்பம், சூரிய ஒளி என்பவற்றின் தாக்கத்தை விபரிக்குக?

(4x3=12 புள்ளிகள்)

04. பாடசாலை செல்லும் 14 வயது மாணவி சிவப்புப் பச்சையரிசிச் சோற்றையும், தேங்காயச் சம்பலையும் கருவாட்டுப் பொரியலையும் காலையுணவாகச் சாப்பிட்டுள்ளார்.

1) சிவப்புப் பச்சையரிசிச் சோற்றில் குறைவாகவுள்ள இன்றியமையா அமினோவமிலம் யாது?
2) உடலிற்கு இவ்வுணவின் போசணைக்குரிய முக்கியத்துவத்தை எழுதுக?
3) தேங்காயில் காணப்படும் கொழுப்பமிலம் எது?
4) சிவப்புப் பச்சையரிசிச் சோற்றில் அடங்கும் பிரதான போசாக்கிற்கு பின் வரும் சமிபாட்டுக் கால்வாய் பகுதிகளாகிய வாய், இரைப்பை, சிறுகுடலில் முறையே நடைபெறும் இரசாயன மாற்றங்களை எழுதுக?

(4x3=12 புள்ளிகள்)

05.

1) பின்வரும் உணவுகளிலுள்ள காரமான சுவைப் பொருளைக் குறிப்பிடுக?

   a. மிளகாய்

   b. மிளகு

   c. இஞ்சி

2) உணவைக் கொள்வனவு செய்யும் போது கவனிக்க வேண்டிய 4 விடயங்களை எழுதுக?

3) உணவு களஞ்சியப்படுத்தலில் எதிர் நோக்கக் கூடிய பொதுவான சிக்கல்கள் நான்கினைக் குறிப்பிடுக?

4) சுவைச் சரக்குகள் என்றால் என்ன?

(4x3=12 புள்ளிகள்)

06.

1) உணவைச் சமைப்பதனால் ஏற்படும் நன்மைகள் நான்கினை எழுதுக?

2) இரைப்பை அழற்சி, இதயநோய்கள், நீரிழிவு தற்காலத்தில் அதிகமாக காணப்படும் தொற்றா நோய்களாகும். நபரொருவரின் உணவுப் பழக்க வழக்கங்கள் இந்நோய்களில் எவ்வாறு தாக்கம் செலுத்துகின்றது. என்பதை விளக்குக?

3) மாப்பசை தயாரிக்கும் போது அதன் தரப்பண்பைப் பேணுவதற்கு கையாள வேண்டிய நுட்ப முறைகள் எவை?

4) விசேட சந்தர்ப்பங்களுக்காகத் தயாரிக்கப்படும் விசேட சோறு வகைகள் நான்கினைப் பெயரிட்டு விரும்பிய ஒன்றின் தயாரிப்பு முறையைத் தருக?

(4x3=12 புள்ளிகள்)

07.

agaram.lk

1) ஆடைக் கைத்தொழிலின் முக்கியத்துவம் தொடர்பான அனுகூலங்கள் நான்கு எழுதுக?

2) ஆடைக் கைத்தொழிலில் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளைப் பட்டியற்படுத்துக?

3) "நவநாகரிகப் பாணி" நிருமாணித்தல் என்றால் என்ன?

4) துணியின் தரத்தைப் பரிசீலனை செய்வதற்கான அளவீடுகள் எவை?

(4x3=12 புள்ளிகள்)